# பத்திரிகைச் செய்தி

## தற்காலிக மின் இணைப்பிலிருந்து நிரந்தர வீட்டு மின் இணைப்பிற்காக லஞ்சம் கேட்டு பெற்ற வணிக ஆய்வாளர் கைது

திருவள்ளூர் மாவட்டம் மோரை தாலுக்கா, வெள்ளானூர் கிராமம், விஷ்ணுநகரை சேர்ந்த திரு. R.சுரேஷ்,ஆ/வ42, த/பெ.ரங்கநாதன், என்பவர் மேற்கண்ட முகவரியில் தனது குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், மனை எண் 81-ல் 1200 சதுரடி கொண்ட காலி மனையை புகார்தாரர் மற்றும் அவருடைய மனைவி பெயரிலும் ஆவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் 28.08.2011ம் தேதி பத்திரபதிவு செய்து பின்னர் அந்த காலிமனையில் வீடு கட்ட தற்காலிக மின்னிணைப்பு கேட்டு வீராபுரம் மின்சார வாரிய அலுவலகத்தில் மனு கொடுத்ததின் பெயரில் 22.10.2020ம் தேதி அன்று தற்காலிக இணைப்பு பெற்றுள்ளனர். புகார்தாரர் வீடு கட்டி முடித்த பின் அந்த வீட்டிற்கு கடந்த 31.05.2023ம் தேதி தற்காலிக மின்னிணைப்பிலிருந்து (கமர்ஷியலிலிருந்து) நிரந்தர வீட்டு மின்னிணைப்பாக (டொமஸ்டிக்) மாற்றி கொடுக்குமாறு வீராபுரம், மின்சார வாரிய அலுவலகத்தில் உள்ள உதவி பொறியாளர் அவர்களை பார்த்து மனு கொடுத்ததற்கு, உதவி பொறியாளர் அவர்கள் இது சம்மந்தமாக அங்கு பணிபுரியும் வணிக ஆய்வாளர் திரு.அன்பழகன், ஆ/வ 58, அவர்களை பார்க்குமாறு கூறியதின் பெயரில், புகார்தாரர் வணிக ஆய்வாளர் திரு.அன்பழகன்னை சந்தித்த போது, அவர் மேற்படி மனுவை பார்த்துவிட்டு வீட்டை வந்து பார்வையிடுவதாக கூறியுள்ளார். பின்னர் கடந்த 19.06.2023ந் தேதி காலை 10.30 மணியளவில் மேற்படி அலுவலத்தில் புகார்தாரர் சென்று வணிக ஆய்வாளாரை சென்று பார்த்தற்கு புகார்தாரரின் மனுவை பரிந்துரை செய்து முடித்து கொடுக்க ரூ.2,000/- லஞ்சமாக கொடுக்கவேண்டும் என்று கூறி அன்றைய தினமே வணிக ஆய்வாளர் திரு.அன்பழகன் அவர்கள் சுமார் 3.00 மணியளவில் வீட்டினை வந்து பார்வையிட்டு சென்றுள்ளார். பின்னர் புகார்தாரர் இது பற்றி மீண்டும் 21.06.2023ந் தேதி சுமார் 12.30 மணியளவில் வீராபுரம் மின்சார வாரிய அலுவலகத்தில் சென்று வணிக ஆய்வாளர் திரு.அன்பழகன் அவர்களை பார்த்து மனுவை பற்றி கேட்டதற்கு, வணிக ஆய்வாளர் திரு.அன்பழகன் அவர்கள் எனக்கு தரவேண்டிய லஞ்ச பணம் ரூ.2,000/-ஐ கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார். அதற்கு புகார்தாரர் தான் ஆட்டோ ஓட்டி பிழைப்பு நடத்துவதாக கூறி தன் நிலையை தெரியப்படுத்திய பின்னரும், தான் கேட்ட பணத்துடன் வந்து தன்னை பார்த்தால் மட்டுமே வேலையை முடித்து தருவதாக கறாராக கூறி அனுப்பியுள்ளார். எனவே புகார்தாரர் 27.06.2023 அன்று திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தை அணுகி புகார் அளித்ததின் பேரில் வழக்கு பதிவு செய்து இன்று 28.06.2023-ஆம் தேதி மேற்படி பணம் ரூ.2,000/-த்தை புகார்தாரரிடம் வணிக ஆய்வாளர் திரு.அன்பழகன் அவர்கள் லஞ்சமாக கேட்டு பெற்றுக்கொண்ட போது திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பொறி வைப்பு நடவடிக்கையில் கைது செய்யப்பட்டார்.